# 01 கடவுள்

நாம் இவ்வுலகில் வாழ்கின்றோம். எம் தாய் தந்தையர் எம்மைப் பெற்றார்கள் என்று சொல்லக் கேட்கிறோம். இவ்வுலகுக்கு எப்படி வந்தோம் என்று வேறு எவ்வகையாலும் நாம் கண்கூடாகக் காண முடிவதில்லை. மக்களும் மற்ற உயிருள்ளனவும் இறப்பதையும் காண்கின்றோம். அவ்வாறே நாமும் ஒருநாள் இறப்போம் என்பதை உணர்கின்றோம். ஆனால் நாம் எப்போது இறப்போம், இறந்தபின் எமது நிலை என்னவாகும் என்று எம்மால் அறியமுடிவதில்லை. இதனாலேயே **'வந்தவாறெங்ஙனே போமாறேதோ மாயமாம்'** என்று அப்பர் சுவாமிகளும் பாடினார். எம்மைப் போலவே பிற உயிரினங்களும் தோன்றி, வாழ்ந்து இறப்பதைக் காண்கிறோம். இந்நிகழ்ச்சிகளுக்கு மூலகாரணமான பேரறிவுடைய பொருள் ஒன்று இருக்கவேண்டும் என்று கொள்ள வேண்டியதாகின்றது. ஆகவே, **ஒருவன், ஒருத்தி, ஒன்று என்று உலகம் முத்திறப்பட்டுத் தோன்றி நின்று அழிவதால் அதை இயற்றியவன் ஒருவன் உளன்** என்றும் அவனே கடவுள் என்றும் சித்தாந்த நூல்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன.

## PhÄ Î ß C»UP n ®

சைவ சித்தாந்தம் கடவுளுக்கு இரண்டு நிலைகள் உண்டு என்று கூறும். ஒன்று சொரூபலக்கணம் எனப்படுஞ் சிறப்பியல்பாகும். மற்றது தடத்தலக்கணம் எனப்படும் பொதுவியல்பாகும். சொரூபலக்கணம் என்பது கடவுளின் உண்மைத் தன்மையைக் காண்பிப்பது. இந்த நிலையிலுள்ள கடவுளுக்குப் பெயர், குணம், குறி முதலிய ஒன்றும் இல்லை. அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்றும் இல்லை. மனம், வாக்கு, காயம், ஆகிய மூன்றாலும் அறியப்படாத அனாதிமுத்த சித்தாயிருக்கும். இந்த நிலையிலுள்ள கடவுளைச் சித்தாந்திகள் **'பரமசிவம்'** என்றும் **'சிவம்'** என்றும் குறிப்பிடுவர். இக்கடவுளே வேதாந்த நூல்களிற் குறிப்பிடப்படும் 'பிரமம்' (அல்லது நிர்க்குணப் பிரமம்) ஆகும். பெயர் இல்லாத கடவுளுக்குப் பெயர் கொடுக்கப்படும். பதியின் சொரூபலக்கணத்தைச் சிவப்பிரகாசம் பின்வருமாறு கூறும்

***பலகலையா கமவேதம் யாவையினும் கருத்துப்***
***பதி பசு பாசந்தெரிதல் பதிபரமே அதுதான்***
***நிலவும் அரு வுருவன்றிக் குணங்குறிகள் இன்றி***
***நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி***
***அலகில் உயிர்க் குணர்வாகி அசல மாகி***
***அகண்டிதமாய் ஆனந்த உருவாய் அன்றிச்***
***செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்***
***திகழ்வது தற் சிவமென்பர் தெளிந்து ளோரே.***

இத்தகைய சொரூபலக்கணத்தையுடைய சிவம், உயிர்களுடைய துன்பங்களைப் போக்கி, அவைகளுக்கு அருள் செய்தற்காக இரக்கங் கொண்டு, தானாகவே பல படிகள் இறங்கி வந்து, பல நிலைகளிலுள்ள கடவுளரை அதிட்டித்து நின்று, அவர்கள் மூலமாக ஆணை செலுத்திப் படைத்தல் முதலிய தொழில்களைச் செய்கின்றது. இந்த நிலை கடவுளின் தடத்தலக்கணம் என்று சொல்லப்படும். தடத்த நிலையிற் சிவத்தோடு பிரிவின்றி நிற்கும் சிவசக்தி முதன்மை பெற்று விளங்கும். உயிர்களின் பொருட்டுப் படியிறங்கி வந்து தொழில் புரியும் தடத்த நிலையிலே பரம சிவம், பரமசிவன் என்று ஆண்பால் வாய்பாட்டாற் சொல்லப்படும். அவனுடைய சக்தி, பராசக்தி என்று பெண்பால் வாய்பாட்டாற் பேசப்படும். உலக வழக்கை யொட்டிச் சிவம், சக்தி இரண்டையும் நாயகன், நாயகி என்றும் கூறுவதுண்டு. இதனைச் சிவஞான சித்தியார் **'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்' என்றும் 'பவன் பிரமாசாரியாகும் பால்மொழி கன்னியாகும்.'** என்றும் கூறுகின்றது.

அன்பர்கள் 'அவனை' அப்பன் என்றும் 'அவளை' அம்மை என்றும் அழைத்து வழிபடுவார்கள். உயிர்களுக்கு அருள் செய்யும் இந்த நிலையிலே தாயின் பண்பே சிறந்து நிற்றலால் அடியார்கள் கடவுளை 'அம்மையே அப்பா' என்று அகங் குழைந்து அழைப்பார்கள். இறைவனின் அருட் பண்பை விதந்து காட்டும் நோக்கமாகவே திருவருட்பயன் என்ற சித்தாந்த நூல் இயற்றப்பட்டது. உயிர்களுக்கு அருள் செய்யும் வகையிற் சிவசக்தி பல்வேறு பெயர்களைப் பெறும். அச்சக்தி பேதங்களை அதிட்டித்து நிற்கும் ஈசனுக்கும் பல்வேறு பெயர்கள் சொல்லப்படும். இவற்றின் விரிவுகளைச் சிவஞான சித்தியாரிலும் சிவஞான பாடியத்திலும் காணலாம்.

சக்தியே உயிர்களைச் சிவத்தோடு சேர்க்க உதவுகின்றது. இதனைத் திருவருட்பயன்,

**தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி**
**பின்னமிலான் எங்கள் பிரான்**

என்று கூறுகின்றது. சிவனும் சக்தியும் பிரிவின்றி இருக்கும் நிலையைப் 'பழமும் சுவையும் போல' என்றும் 'பண்ணும் இசையும் போல' என்றும் 'மணியும் ஒலியும் போல' என்றும் 'நெருப்பும் சூடும் போல' என்றும் சித்தாந்த நூல்கள் பல உவமைகளால் விளக்குகின்றன.

சொரூப நிலையிலே குணங்குறி ஒன்றும் இல்லாத கடவுளுக்குத் தடத்த நிலையிலே மெய்யன்பர்கள் பற்பல குணங்களையும் குறிகளையுங் கூறுவார்கள். இறைவனுக்குக் கூறப்படும் இக்குணங்களையெல்லாஞ் சைவ நூல்கள் எட்டுக் குணங்களிலே அடக்கிவிடுகின்றன. இவற்றைத் திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பாடலில் வரும் 'எண்குணத்தான்' என்ற பெயருக்குப் பரிமேலழகர் எழுதியுள்ள உரை விளக்கத்திற் காணலாம். குணங்கள் கூறியது போலவே அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்று வடிவங்களும் (திருமேனிகளும்) கடவுளுக்குக் கூறப்படுகின்றன. ஆயிரம் பெயர்களும் கூறப்படுகின்றன.

**‘ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலாற் காயிரம்**

**திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ’**

என்பது திருவாசகம், இறைவனை அன்பால் வழிபடுகின்ற அன்பு நெறியிலே, அன்பு மேலீட்டால் அவனுக்கு அடியார்கள் கூறும் குணம், குறி, பெயர் எல்லாம் ஏற்புடையனவே என்று சைவ சித்தாந்தம் ஒப்புக்கொள்ளும்.

## CøÓÁÛß ‰ÁøPz v¸÷©ÛPÒ

தலைவன் (பதி) உயிர்களுக்கு அருளும் பொருட்டு இச்சா சத்தி, கிரியா சத்தி, ஞான சத்தி என்ற மூன்று ஆற்றல்களோடு கூடி நிற்பான். திருவருளே திருமேனியாகக் கொள்வான். அப்பொழுது அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்று திருமேனிகளைக் கொள்வான்.

**அருவம்** : கண்ணிற்கு புலனாகாது சக்தி வடிவமாக இருந்தே, காரியங்களை செய்வது. சதாசிவன் (நிஷ்கள சிவன், சத்தர்) என்று அழைக்கப்படுவர். சிவ பெருமான் ஞான சக்தியுடன் மட்டுமே பொருந்தியிருக்கும் தன்மையால் அருவ வடிவம் தாங்குகின்றார்.

**அருவுருவம்**: ஞானசக்தியையும், கிரியாசக்தியையும் சம அளவில் கொள்வதன் மூலம் பூணுகின்ற வடிவம். ஒருமுறை புலனாகியும், புலனாகாமலும் இருப்பது இவ்வடிவமாகும். புலனாகும்போது முகம், கை, கால் போன்ற உறுப்புக்கள் ஏதுமின்றி காட்சியளிப்பது. ஒளி, இலிங்கம் ஆகியன அருவுருவத் திருவடிவங்களாகும்.

**உருவம்**: ஞானசக்தியை விட கிரியாசக்தியை மிகுவித்து அதன்மூலம் கண்களுக்கு புலனாகும் வகையில் முகம், கை, கால் போன்ற உறுப்புகளுடன் தெளிவாகத் தோன்றுவது உருவத் திருவடிவமாகும். தென்முகக்கடவுள், சோமஸ்கந்தர், அர்த்தநாரீஸ்சுவரர், நடராசர் போன்ற மகேசுவர மூர்த்தங்கள் இதற்குள் அடங்கும்.

பதிப்பொருள் அருவம், உருவம், அருவுருவம் என்ற மூன்று தன்மையும் இல்லாதது. ஆயினும் உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு அருவாகியும் உருவாகியும் அருவுருவாகியும் தான் நினைத்த வண்ணம் தோற்றம் கொள்ளும் வல்லமை உடையவன் இறைவன். இந்தக்கருத்தைச் சிவஞானசித்தியாரின் முதல்நூற்பாவின் இரண்டாவது அதிகாரத்தில்.

**குறித்தது ஒன்று ஆகமாட்டாக் குறைவிலன் ஆத லானும்**
**நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்**
**வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுதல் இலாமை யானும்**
**நிறுத்திடும் நினைந்த மேனி நின்மலன் அருளினாலே.**

என்று வலியுறுத்துகிறார். உயிர்களின் பொருட்டு அருவமாயும் உருவமாயும் அருவுருவமாயும் தனது பேரருளாலே திருமேனி கொண்டு தோன்றுங் காலத்து இறைவன் குணமும் குறியுமின்றியே நிற்பன். இங்கு குணம் என்றது மாயையின் காரியங்களாய் உயிர்களை மருவும் இராசத தாமத சாத்துவிக குணங்களையே ஆகும். ஏனெனில் எவ்வகைக் குணங்களும் அற்ற ஒரு பொருள் இருத்தல் இயலாது. அவ்வாறு இருப்பின் அப்பொருள் பயன்படாது. எனவே நிர்க்குணம் என்பது முக்குணங்களின் நீங்கிய நிலையேயன்றிப் பிறிதன்று. குறிகளும் அடையாளமும் இறைவனுக்கு உபசார மேயன்றி அவனது உண்மைப் பேரியல்புகள் ஆக மாட்டா.

## பாடச் சுருக்கம்

கடவுள் ஒருவரே உண்மையானவர்; நிலையானவர்.

உலகம் தோன்றி நின்று அழிவதால் அதனை இயற்றியவர் இறைவன் என்று சித்தாந்த நூல் கூறுகின்றது.

இறைவனின் இருநிலைகள் சொரூபலக்கணமும் தடத்தலக்கணமும் ஆகும்.

அருவம், உருவம், அருவுருவம் என்பன இறைவனின் மூவகைத் திருமேனிகளாகும்.

இறைவனின் மூவகைத் திருமேனிகள் பற்றி சிவஞானசித்தியார் எனும் நூலில் '**இறைவன் உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு தான் நினைத்த வண்ணம், தோற்றம் கொள்ளும் வல்லமையுடையவர்**' என அருணந்தி சிவாசாரியார் கூறியுள்ளார்.

## பயிற்சிகள்

*பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.*

1. *இறைவனின் இருநிலைகளையும் அவரது மூவகைத் திருமேனிகளையும் விளக்குக.*

2. ***'கடவுள்'** என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?*

3. *சைவசித்தாந்த நூல்களில் சிவனும், சக்தியும் பிரிவின்றி இருக்கும் நிலையினை விளக்கப் பயன்படுத்தியுள்ள உவமைகள் யாவை?*

4. ***'கடவுள் ஒருவனே'** என்பதை ஆதாரங்களுடன் விளக்குக.*

## செயற்பாடு

*கடவுள் பற்றி திருமுறைகளிலும், சித்தாந்த நூல்களிலும் கூறப்பட்டுள்ள கருத்துக்களை சேகரிக்குக.*